# திருப்பு முனை

‘உனக்கு எவ்வளவு நல்ல மனம்! இங்கு இருக்கும் எவரும் இந்த மூப்படைந்தவர்களுக்கு உதவ வேண்டும் என்று எண்ணாதபோது, எனக்குத் தானாகவே வந்து உதவுகிறாயே! உன் நல்ல மனத்தையும் பண்பையும் எண்ணும்போது உன்னை வளர்த்த தாயைப் பாராட்டத் தோன்றுகிறது என்றார், நான் பைகளைத் தூக்கிக் கொடுத்து உதவிய பாட்டி. இதைக் கேட்டபோது என் முகத்தில் பூத்த புன்னகைக்கு அளவில்லை. அந்த மூதாட்டியை அவருடைய அடுக்குமாடிக் கட்டிடத்தின் கீழ்த்தளத்தில் விட்டுத் திரும்பி வரும் வழியில் எனக்கு இரண்டு வருடங்களுக்கு முன் நடந்த சம்பவங்கள் ஞாபகத்திற்கு வந்தன. ‘என் தாய் என்னுடைய நடத்தையைப் பார்த்து நொந்துகொண்டு கூறிய வாக்கியங்கள் என் காதுகளில் ரீங்காரம் இட்டன. பெற்ற தாயிடம் திட்டு வாங்கிக்கொண்டிருந்த என் மனப்போக்கை மாற்றி, யாரென்று தெரியாதவர் கூட என்னைப் பாராட்ட வைத்த சம்பவம் என் நினைவிற்கு வந்தது.

ஆளாளுக்குத் திமிர் பிடித்தவள், அகம்பாவம் பிடித்தவள், தலைக்கனம் இவளுக்கு அதிகமாகவே இருக்கிறது என்று பலர் என் முதுகுக்குப்பின் கூறிக்கொண்டிருந்தாலும் அதைப்பற்றி ஏதும் கவலை கொள்ளாமல் ஒரு மிடுக்குடனே வாழ்க்கையை நடத்திக்கொண்டு வந்தவள், நான். என் பெற்றோர்கள் செல்வவளத்துடன் இருப்பதால் மற்ற மாணவர்களைவிடச் சற்று அதிகமாகவே என் செலவுக்கெனப் பணம் கொடுத்தார்கள். அதை வைத்துக்கொண்டு நான் மிகவும் ஆடம்பரமான வாழ்க்கையை நடத்திக்கொண்டு வந்தேன். வீட்டிற்கு ஒரே பிள்ளை என்பதால் எனக்கு என் வீட்டில் செல்லம் அதிகம். ஏதாவது தவறு செய்தால்கூட என்னைச் சற்று நேரம் கடுமையாகத் திட்டிவிட்டு மறுகணம் எனக்குத் தேவையானவற்றைச் செய்து கொண்டிருந்தார்கள் என் பெற்றோர்கள். அதை என்னுடைய பலமாகப் பயன்படுத்திக்கொண்டு நான் நினைத்த ஆடம்பர வாழ்க்கையை வாழ்ந்து வந்தேன்.

என்னுடைய நடைமுறையும் மனப்போக்கும் மிகத் தவறான ஒன்றாகவே இருந்தது. ஏழை எளியோர் யாரையாவது பார்த்தால் கேலி செய்வது பணத்திமிருடன் இருப்பது என ஆடம்பர வாழ்க்கைக்கு அடிமையாகவே இருந்தேன். இப்படி ஒரு மனப்போக்கில் சுற்றிக் கொண்டிருந்த என்னைச் சுழற்றிப் போட்டச் சம்பவம் கூடிய விரைவில் வரும் என்பது எனக்கு அப்போது தெரியாது.

ஒருநாள் காலை பள்ளியில் நான் என் புது விலை உயர்ந்த கைபேசியை என் நண்பர்களிடம் காட்டிப் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தேன். அப்பொழுது ஆசிரியர் வகுப்பினுள் வந்து எங்களிடம் ஒரு படிவத்தைக் கொடுத்தார். நான் அது என்னவென்று படித்துப்பார்த்தேன். அதில் பள்ளியிலிருந்து மாணவர்களை இந்தியாவில் இருக்கும் அனாதை இல்லத்திற்குத் தொண்டு வேலை செய்ய அழைத்துச் செல்வதாக எழுதி இருந்தது. அது மட்டுமல்லாமல் அனைத்து மாணவரும் அதற்குக் கட்டாயம் வர வேண்டும் என்றும் போட்டிருந்தது. அதைப் படித்தவுடன் எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. நானாவது இப்படிச் சமூக சேவையெல்லாம் செய்வதாவது என்று என் நண்பர்களிடம் கூறிக்கொண்டிருந்தேன். ஆனால, அது கட்டாயம் செல்ல வேண்டிய ஒரு பயணமாக இருந்ததால் நான் போக வேண்டிய ஓரு சூழ்நிலை எனக்கு அப்பொழுது அங்குப் போக எனக்கு விருப்பமே இல்லை. முக்கியமாக முதன் முறையாக இந்தியா செல்வதில் விருப்பமில்லை. அப்பொழுது அங்குச் செல்வதில் எனக்கு ஆனந்தமாக இருக்க ஒரே காரணம் அங்கு இருக்கும் எளியோர்களைக்

கிண்டல் அடிப்பது மட்டுமே இரண்டு வாரத்தில் வரவிருந்த பயணத்திற்கு நான் விருப்பமே இல்லாமல் செல்லத் தயாராகிக்கொண்டு இருந்தேன்.

இறுதியாக நாங்கள் அங்குச் செல்ல வேண்டிய நாளும் வந்தது. இந்தியாவிற்குப் போய்ச் சேரும் வரை நான் என் தோழர்களுடன் உரையாடிக்கொண்டு ஆனந்தமாகத்தான் இருந்தேன். ஆனால், அங்கு இறங்கி நாங்கள் தங்கிக்கொண்டிருந்த விடுதிக்குப் போகும் வரை என்னால் ஆனந்தமாக இருக்க முடியவில்லை. வாடகை உந்து வண்டியில் ஏறிய பிறகு நான் பார்த்த அனைத்துக் காட்சிகளும் என் முகத்தை இன்னும் சுளிக்க வைத்தன. இந்தியாவின் சுற்றுச்சூழலை முதன் முறையாகப் பார்க்கும்போது எனக்கு இந்தியாவையும் இந்திய மக்களையும் பிடிக்காமல் போவதற்கான காரணங்களே தென்பட்டன. இறுதியாக நாங்கள் தங்கவிருக்கும் விடுதியை வந்தடைந்தோம்.

எங்கள் பைகளை அங்கு வைத்துவிட்டு அருகில் இருக்கும் அனாதை இல்லத்திற்குச் செல்லவிருந்தோம். அங்குச் சென்றதும் அங்கு இருக்கும் பிள்ளைகளின் உடையைப் பார்த்தபோது நான் என் நண்பர்களுக்குள்ளே அவர்களைக் கேலி செய்து கொண்டிருந்தேன். அங்கு நாங்கள் இருந்த அரை மணி நேரம் வரைக்கும் அங்கிருந்த ஒவ்வொரு பிள்ளையையும் அவர்கள் காதுகளுக்கு எட்டுமாறு கேலி செய்து கொண்டிருந்தேன். அவர்களின் மனது இதனால் புண்பட்டது என்பது எனக்குத் தெளிவாகத் தெரிந்தது. ஆனாலும் நான் என் செயலை நிறுத்தவில்லை. ஆனால், அப்பிள்ளைகள் நான் செய்ததை அந்த நேரத்திலே மறந்துவிட்டு என்னிடம் மீண்டும் வந்து இயல்பாகச் சகஜமாகப் பேசினார்கள். ஆனால், நான்தான் அவர்களை உதாசீனம் செய்தேன்.

அங்கு நான் திக்குத்திசை தெரியாமல் உலாவிக் கொண்டிருந்தபோது கீழே கிடந்த கல்லைப் பாராமல் நடந்ததால் கல் இடறிக் கீழே விழுந்தேன். கீழே விழுந்தபோது என் அருகினில் நான் உதாசீனம் செய்த ஒரு பிள்ளையைத் தவிர எவரும் இல்லை. நான் விழுந்ததைக் கண்டதும் அந்தச் சிறுவன் ஓடோடி வந்து எனக்கு உதவினாhன். எனக்கு நான் விழுந்து அனுபவித்த வலியைவிட நான் இவ்வளவு கேலி செய்தும் அவன் எப்படி எனக்கு உதவினான் என்ற ஆச்சரியம் அதிகமாக இருந்தது. அந்தச் சிறுவன் என்னை அலுவலகத்திற்கு அழைத்துச் சென்று அங்கிருந்தவர்களிடம் நடந்ததைக் கூறினான். அவர்கள் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு மருந்துபோட்டு அனுப்பினார்கள். எனக்கு அப்பொழுதுகூட ஆச்சரியம் அடங்கவில்லை. வெளியே வந்து அந்தப் பையனைத் தேடி நன்றி சொன்னேன்.

அப்பொழுதுதான் எனக்குத் தெரிந்தவரை நான் ஒருவருக்கு முதல் முறையாக நன்றி சொல்லியது என்று நினைக்கிறேன். அதற்குப்பிறகு என்னிடம் இருந்த திமிரும் மிடுக்கும் எங்குச் சென்றது என்று எனக்குத் தெரியவில்லை. அங்கிருந்த பிள்ளைகளிடமும் என் நண்பர்களிடமும் ஒழுங்காகப் பேச ஆரம்பித்தேன்.

அங்கு நான் இருந்த மூன்று நாட்களில் ஈடுபட்ட அனைத்து நடவடிக்கைகளும் என்னிடம் இருந்த மனப்போக்கை மாற்றியது. இதற்கெல்லாம் அடிப்படையாக இருந்தது எனக்கு உதவிய அந்தச் சிறுவன் இரண்டு வருடங்கள் ஆகியும் எனக்கு இன்னும் என்ன புரியவில்லை என்றால் எப்படி அந்தச் சிறுவன் நான் செய்த கேலியை மறந்துவிட்டு எனக்கு உதவினாhன் என்பதே ஆகும். அவனுடைய மனப்பான்மையே காரணமாக இருக்கலாம் என்று நான் சொன்னால் அது மிகையாகாது.

**பூர்வசந்தியா**

**உயர்தமிழ்**

**உயர்நிலை 2**

## விளையாட்டு வினையானது

பேருந்து, நிலையத்திற்கு வந்து ‘கிரீச் என்ற சத்தத்துடன் நின்றது. “பார்த்து மெதுவாகக் கீழே இறங்கு மாலதி” என்று கூறி மாலதி பத்திரமாகப் பேருந்திலிருந்து கீழே இறங்க உதவினேன். மாலதி மிகப் பூரிப்புடன் “எனக்கு உதவி செய்வதற்கு மிக்க நன்றி சிவா” என்று கூறினாள். நானோ, ‘இது என்னுடைய கடமை என்று கூறியவுடன் என் வாழ்க்கையையே மாற்றிய அந்தச் சம்பவத்தைப் பற்றித் திரும்பவும் நினைத்துப் பார்த்தேன்.

நான் எப்போதும் மற்றவர்களை ஏமாற்றிக்கொண்டே இருப்பேன். மற்றவர்கள் ஏமாறுவதைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைவேன். அவ்வாறு செய்வது மிகப்பெரிய தவறு என்று என் நண்பர்களும் பெற்றோரும் எவ்வளவு கூறியும் செவிடன் காதில் ஊதிய சங்கு போல ஆயிற்று. இதுபோன்ற சிறிய விளையாட்டுகள் எவ்வாறு ஆபத்தாகும் என்று எண்ணியதே நான் செய்த தவறாகும்.

பொம்மைப் பூச்சிகளை அவர்களின் உணவில் போடுவது வீட்டுப்பாடத்தை மறைத்து வைப்பது போன்ற ஏமாற்றுச் செயல்களைச் செய்து வந்தேன். இதுபோன்ற சிறிய செயல்களில் ஆரம்பித்து மிகப்பெரிய சிக்கலில் முடியும் என்று நான் கற்பனையில்கூட எண்ணவில்லை.

அன்று ஒரு வியாழக்கிழமை காலை ஒரு பத்து மணி இருக்கும். இடைவேளை நேரம் என்பதால் ‘யாரை அடுத்து ஏமாற்றலாம்? என்று நினைத்துக்கொண்டிருந்தேன். அப்போதுதான் மாலதி அந்தப் பக்கம் வந்தாள். மாலதி மிகவும் அமைதியான பெண். எல்லோருக்கும் உதவும் மனப்பான்மை உடையவள். அவளைக் கூப்பிட்டு நான், “மாலதி” உன்னைக் கண்டு நிறைய நாட்கள் ஆகிவிட்டனவே, சரி கொஞ்ச நேரத்திற்கு முன்பு தலைமையாசிரியர் உன்னைத் தேடிக்கொண்டிருந்தார்; உன் அம்மா பதற்றமான குரலில் தொலைபேசியில் கூப்பிட்டதாகக் கூறினார், என்று கூறினேன். உடனே மாலதி ‘ஐயோ! என் அம்மாவிற்கு உடல்நலம் மிக மோசமாக இருந்தது. அதனால்தான் அம்மாவிற்கு உதவியாக இரண்டு நாட்கள் வீட்டிலேயே இருந்து அவரைப் பார்த்துக்கொண்டேன். இப்பொழுது அவருக்கு என்ன ஆயிற்று என்று தெரியவில்லையே! என்று புலம்பியபடியே அவள் வேகமாகத் திரும்பியபோது படிகள் இருப்பதைக் கவனிக்காமல் தடுக்கி விழுந்துவிட்டாள்.

இதைக் கண்டவுடன் என் இதயமே நின்றுவிட்டது போன்ற உணர்வு ஏற்பட்டது. அதிர்ச்சியில் நான் அடியற்ற மரம் போல ஆனேன். மருத்துவமனையில் அவளைக் காணச்சென்றபோது மருத்துவர் அவள் காலில் பலத்த காயம் ஏற்பட்டதாகவும் எட்டு மாதத்திற்குஇ முன்புபோல் ஓடி ஆடி விளையாட இயலாது என்றும் கூறினார். குற்ற உணர்வு எனது மனத்தை வாட்டியது. குற்றம் செய்த நெஞ்சு குறுக்குறுக்கும் அல்லவா?

நான் மாலதியை மருத்துவமனையின் அறையில் பார்த்தபோது எனக்கு மிகவும் சோகமாக இருந்தது. என்னால்தான் மாலதிக்கு இப்படி ஒரு சங்கடம் ஏற்பட்டுள்ளது. அதற்குப் பரிகாரமாக நான் ஒரு வருடத்திற்கு அவளுக்கு தேவையான அனைத்துத் தேவைகளையும் செய்து தருவதாக அவளிடம் கூறினேன்.

அச்சம்பவத்திலிருந்து விளையாட்டு வினையாகும் என்பதைக் கற்றுக்கொண்டேன். நாம் மற்றவர்களை ஏமாற்றாமல் அவர்களிடம் அன்பும் பாசமும் காட்டுவதே சிறந்தது. ‘அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு என்புதோல் போர்த்த உடம்பு” என்ற

திருக்குறளைப் போலவே அன்பைப் பகிர்ந்து கொள்வதே மிகச் சிறந்தது. அன்றிலிருந்து என் மனப்போக்கு  மாறிவிட்டது.

“சென்று வருகிறேன் சிவா! என்று கூறி மாலதி விடைபெற்றாள். இதுபோன்ற மாற்றம் என் வாழ்க்கையில் நடந்ததை நினைத்து மகிழ்ச்சி அடைந்தேன். இன்றும் மகிழ்ச்சியடைகிறேன்.

**சென்சியா கிளாடினா**

**உயர்தமிழ்**

**உயர்நிலை 2**

## அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு

பெற்றோர்களில் சிலர் பிள்ளைகளுக்கு அதிகச் சுதந்திரம் கொடுத்து வளர்த்து வருகின்றனர். இதனால் ஏற்படும் நன்மை தீமைகளை நான் இந்தக் கட்டுரையில் விளக்கி எழுதப் போகிறேன்.

கத்தியின் இரு பக்கங்களைப் போல பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு அதிகச் சுதந்திரம் கொடுப்பதில் நன்மைகளும் உண்டு, தீமைகளும் உண்டு. இதில் நன்மை என்னவென்றால், பெற்றோர்களும் பிள்ளைகளும் நண்பர்களைப் போல் இருப்பார்கள். அவர்களுக்குகிடையே பெரும்பாலும் எந்தவொரு ரகசியமும் இருக்காது. அதோடு அவர்களுடைய பிணைப்பு மிகவும் வலுவாக இருக்கும். அது மட்டுமல்லாமல் இங்குப் பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளின் மீது வைத்திருக்கும் நம்பிக்கையையும் அளவு கடந்த பாசத்தையும் பார்க்க முடிகிறது. அதோடு பெற்றோர்களுக்குப் பிள்ளைகளைப் பற்றி நிறைய தெரியும். இவ்வாறு நிறைய நன்மைகள் இருக்கின்றன. ஆனால், அதே சமயம் தீமைகளும் உண்டு.

பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு அதிகச் சுதந்திரம் கொடுத்து வளர்த்தால் நம்முடைய பிள்ளைகள் என்ன செய்கிறார்கள் என்று தெரியாமல் போகிறது. மேலும், பிள்ளைகளின் மேல் உள்ள நம்பிக்கையால் அவர்களுக்குக் கைத்தொலைபேசியை வாங்கிக்கொடுக்கின்றனர். ஆனால் இதன் பெற்றோர் கொடுக்கும் சுதந்திரத்தைப் பிள்ளைகள் தவறாகப் பயன்படுத்துவதுண்டு. படிப்பில் கவனம் செலுத்தாமல் கைத்தொலைபேசியிலேயே நேரத்தை வீணாகக் கழிக்கின்றனர். நேரம் பொன் போன்றது என்பதால் நேரத்தைப் பயனுள்ள வழிகளில் செலவழிக்க வேண்டும் என்பதைப் பிள்ளைகள் உணருவதில்லை. அதோடு படிப்பில் அலட்சியப்போக்குடன் நடந்துகொள்கின்றனர். கல்வி ஓர் அழியாச் செல்வம் என்பதால் அது மிகவும் முக்கியம். ஏனெனில் அது "வெள்ளத்தால் அழியாது வெந்தணலால் வேகாது' ஆனால், இதையும் பிள்ளைகள் உணருவதில்லை.

'ஓடி விளையாடு பாப்பா' என்னும் வரியில் ஓடி விளையாடச் சொல்கிறது. ஆனால், பெற்றோர்கள் கொடுக்கிற சுதந்திரத்தால் இந்த நவீன காலக்காட்டத்தில் பிள்ளைகள் இணையத்திலே இருக்கின்றனர். அதனால் அவர்களுடைய கண் பார்வை கெடுவதோடு அவர்கள் படிப்பில் காட்டும் அக்கறையும் குறைகிறது. பெற்றோர்கள். பிள்ளைகளுக்குச் சுதந்திரம் கொடுப்பது தவறில்லை. ஆனால் இந்த அளவிற்கு அதிகமாகச் சுதந்திரம் கொடுக்கக்கூடாது. இல்லையெனில் பிள்ளைகள் கெட்டுப்போய்விடுவார்கள். பல தருணங்களில் இந்தச் சுதந்திரம் பிள்ளைகளைக் கெடுக்கிறது " அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" என்பது முற்றிலும் உண்மை.

பிள்ளைகள் பல நேரங்களில் அவர்கள் செய்த தவற்றை மறைக்கப் பொய் சொல்லத் துணிவார்கள். இந்த வயதில் எந்தச் சூழ்நிலையிலும் நேர்மையாக நடந்துகொண்டால் "மலைபோல் வருவது பனிபோல் கரையும்"; என்ற கருத்தை உணரமாட்டார்கள். அதனால் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். அவர்கள் மீது எப்போதும் ஒரு கண் இருக்க வேண்டும் சில நேரங்களில் பிள்ளைகள் நல்ல நண்பர்களையும் தீய நண்பர்களையும் பகுத்தறியும் பண்பு இல்லாமல் கெட்ட சகவாசங்களை வைத்துக்கொள்கின்றனர். அப்போது பெற்றோர்கள் அதைக் கண்டுபிடித்து அவர்களிடம் அன்புடன் எடுத்துச்சொல்லித் திருத்த வேண்டும். உலகம் மிகவும் கெட்டுப்போய்க் கிடக்கிறது. அதனால் எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கும் எனத் தெரியாது. அதனால்

பெற்றோர்கள் தன் பிள்ளைகளுக்கு அளவு கடந்த சுதந்திரம் கொடுக்கக் கூடாது அவர்களை நல்வழியில் கொண்டு செல்ல, பண்பு மிக்க கருத்துள்ள கதைகளைச் சொல்ல வேண்டும். பிள்ளைகளுக்குச் சுதந்திரம் கொடுப்பதில் நன்மைகளைவிட தீமைகள் அதிகம் உள்ளன.

பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு நிறைய பழமொழிகள் சொல்லலாம். எடுத்துக்காட்டாக, ‘முயலும் வெல்லும் ஆமையும் வெல்லும்’ ஆனால், ‘முயலாமை என்றும் வெல்லாது’ என்பதை உணர வேண்டும். ‘காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப்பெரிது’ போன்றவற்றைக் கூறி அவர்களைப் பண்புமிக்க ஆளாக மாற்ற வேண்டும். ஏனெனில் பிள்ளைகளுக்கு அதிகம் சுதந்திரம் கொடுப்பதால் அவர்கள் தவறான வழியில் செல்வதற்கு நிறைய வாய்ப்புகள் உண்டு. அதனால் பெற்றோர்களையும் அவதிப்பட வைக்கின்றனர். பிள்ளைகளுக்குச் சுதந்திரம் கொடுக்கலாம், ஆனால் அதிகச் சுதந்திரம் அல்ல.

**சுவேத்தா**

**உயர்தமிழ்**

**உயர்நிலை 2**

## தாய்மொழி கற்றல்

தாய்மொழி என்னும்போது அனைவரிடத்திலும் பெருமைகொள்வது அவசியம். தாய்மொழி ஒரு மொழி என்பதைக் காட்டிலும் தனிப்பட்டவரின் அடையாளம் என்பதை மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. ஆனால், இன்பமாகக் கருத வேண்டிய தாய்மொழியை இன்றைய மாணவர்கள் பெரும் சுமையாகக் கருதுகின்றனர். அதனுடைய கற்றலில் எண்ணற்ற சவால்களை எதிர்நோக்குகின்றனர்.

இன்றைய மாணவர்கள் தாய்மொழியில் சாதாரணமாக உரையாடவே திக்கிக்கொண்டிருக்கின்றனர். இதற்குக் காரணம் சிறு வயது முதல் வீட்டில் ஆங்கிலத்தில் உரையாடுவதே ஆகும். வளர்ந்து வரும் வாழ்க்கைச் சூழலில் ஆங்கிலமே பேரளவில் பேசப்படுகிறது. தங்கள் பிள்ளைகள் போட்டி மிகுந்த வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும் என எண்ணி ஆங்கிலத்தைப் பழக்கிய பெற்றோர் ஒரு தவறான எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தனர்.

தாய்மொழியை மனதாரக் கற்றுக்கொள்வதை விடுத்து மதிப்பெண்களுக்காகக் கற்றுக்கொள்ளும் மாணவர்களால் உண்மையில் தேர்வில் தேர்ச்சி அடைய முடிவதில்லை. இதற்குக் காரணம் அவர்களிடத்தில் தாய்மொழியில் வளம் இருப்பதில்லை. ஆங்கிலத்திலே தேர்வுகளுக்குக் கருத்தைச் சேகரிக்கும் அவர்கள் அதனை மொழி பெயர்ப்புச் செய்யப் பாடுபடுகின்றனர். மேலும், அதனால் கருத்துகளில் பொருள் மாற்றம் உண்டாகிறது. இறுதியில் குறைவான மதிப்பெண்கள் பெறுகின்றனர்.

மாணவர்கள் பெரும் மனவுளைச்சலுக்கும் ஆளாகின்றனர். தங்களது தவறான உச்சரிப்பு அல்லது கருத்தை யாரேனும் கேலி செய்து விடுவர் என எண்ணி அச்சம் கொள்கின்றனர். எனவே, தங்களது கருத்துகளை யாரிடமும் பகிராமல் அது சரியா? தவறா? எனத் தெரியாமல் தங்களை ஒரு வட்டத்துக்குள் அடைத்துக்கொள்ளும் அவர்கள் சுத்தமாகவே அவர்களது கற்றலுக்குப் பங்கம் விளைவித்துக் கொள்கின்றனர்.

இப்பிரச்சினையை ஆசிரியர்கள், மாணவர்களோடு சேர்ந்து உழைப்பது மூலம் தவிர்க்கலாம். மாணவர்களை ஊக்கப்படுத்துதல் மிகவும் அவசியம். தவறுகள் செய்வதால் அஞ்ச வேண்டாம் என அவர்களுக்குப் புரிய வைப்பது அவசியம். ‘ஊக்கம் இருந்தால் ஊக்கு விற்பவனும் தேக்கு விற்பான்’ என்பதற்கு இணங்க மாணவர்களை முயற்சி செய்யத் தூண்ட வேண்டும்.

தாய்மொழியில் வளம் பெறுவதற்குக் கதைப்புத்தகங்கள் சிறந்த நண்பன் என்பதை மாணவர்கள் அறிவது அவசியம். ‘நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான்கற்ற நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு’ என்பதற்கு இணங்க அவர்கள் நிறைய கதைப்புத்தகங்கள் படித்துப் புதிய சொற்களை அறிவதோடு எவ்வாறு நமது கருத்தை வெளிப்படுத்த வேண்டும் என்றும் கற்றுக்கொள்கின்றனர். வாரம்தோறும் குறைந்தது ஒரு கதைப் புத்தகமாவது படிப்பதைப் பழக்கம் ஆக்கி கொள்வது அவசியம்.

ஒரு மொழியில் சிறந்த தேர்ச்சி பெற அதனை பேசிப் பழகுவது முக்கியம். தாய்மொழியில் பேசுவதைத் தாழ்வாகக் கருதுவதைத் தவிர்த்தும் பெருமையாகப் பெற்றோருடனும் பள்ளியில் நண்பர்களுடனும், பண்டிகையின்போது உறவினர்களுடனும் தாய்மொழியில் பேசுவது தாய்மொழி வளத்தை வலுப்படுத்தும்.

வருங்காலத்தில் தம் பிள்ளைகள் சிறந்து விளங்க வேண்டும் என எண்ணும் பெற்றோர்கள் சிறு வயதிலிருந்தே தம் பிள்ளைகளைத் தாய்மொழியில் உரையாடப் பழக்க வேண்டும். தாய்மொழி நமது தாய்வழி வந்த மொழி அதனை எவ்வாறு நமது தாயாரைக் காப்போமோ அதுபோல் காத்து வருவது அவசியம். நமது அடையாளமாகத் திகழும் விலை மதிப்பற்ற சொத்தை அழியாது பாதுகாப்பது ஒவ்வொருவரின் கடமையாகும். அதனுடைய தொடர்ச்சியாகக் காப்பாற்றும் சக்தி இன்றைய இளைஞர்களிடமே உள்ளது. எனவே சிந்தித்துச் செயலாற்றுங்கள்!

**பிரித்திகா**

**உயர்தமிழ்**

**உயர்நிலை 3**

## சுற்றுச்சூழல் பாதுகாப்பு

‘சுற்றுப்புறத் தூய்மை சுகாதாரத் தன்மை’ என்பர். சிங்கப்பூர் நாட்டைப் பசுமையாகவும், சுத்தமாகவும் வைத்துக் கொள்வோம் என உதட்டளவில் மட்டுமே கூறத் தொடங்கிவிட்டோமா? உண்மையில் யார் சிங்கப்பூரைச் சுத்தமாக வைத்து கொள்கிறார்கள். குடிமக்களா? கண்டிப்பாக இல்லை. அரசாங்கமே அதனைத் தடை செய்யக் கடமையாகக் கொண்டு கடைப்பிடித்து வருகின்றது. நம்மில் எத்தனை பேர் காலையில் எழுந்து சாலைகளில் வெளிநாட்டு ஊழியர்கள் சுத்தம் செய்வதைப் பார்த்துத் திருந்துகிறோம். அவர்களின் கடின உழைப்பைப் பாராட்டவிட்டாலும் அதனைப் பார்த்தாவது சுகாதாரவழியில் நடந்து கொள்ளலாமே. நமது சுற்றுச்சூழல் பாதுகாப்பு எவ்வாறு கடைப்பிடிக்க வேண்டும் என்று இக்கட்டுரையில் பார்ப்போம்.

‘நீ காண விரும்பும் மாற்றமாய் வாழ்ந்திடு மாறவேண்டுமா? உன்னை நீ மாற்றிக்கொள்’, நீ காண விரும்பும் மாற்றமாய் வாழ்ந்திடு என்று காந்தி கூறியுள்ளார். எந்தவொரு மாற்றமும் தானே வராது. நண்பர்களுடன் அல்லது குடும்பத்துடன் வெளியே இருக்கையில் சாப்பிட்ட தாள்களைக் குப்பைத்தொட்டியில் போடுவதை ஒரு பழக்கமாக்கிக் கொள்ளுங்கள். உங்களது குடும்பத்தினர் அல்லது நண்பர்கள் உங்களைப் பார்த்துக் கேலி செய்தால் அதனைப் பொருட்படுத்தாது மௌனம் சாதியுங்கள். ஒரு முட்டாளின் கேள்விக்கு மௌனமே சிறந்த பதிலாகும். உங்களது மௌனமே அவர்களுக்குச் சிறந்த பாடமாகும் அவர்களும் நாளடைவில் தங்களது தவற்றை உணர்ந்து தங்களது பங்கை ஆற்றுவர்.

நிறைய பேர் தாங்கள் செய்வது தவறு என்று அறியாது அதனைச் செய்து வருகின்றனர். வெளியே யாரேனும் குப்பை போடுவதைப் பார்த்தால் உடனே விரைந்து சென்று அவர்கள் கண் முன்னே அக்குப்பையை ஒரு குப்பைத்தொட்டியில் போட்டுவிட்டு அவர்களைப் பார்த்துப் புன்முறுவல் இடுவதன் மூலம் நாம் அவர்களுக்கு அவர்தம் தவற்றை எடுத்துரைக்க விழைகின்றோம். அவமானத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்கள் கண்டிப்பாகத் தவற்றை இன்னொரு முறை செய்யக் கூடாது என்பதில் உறுதியாக இருப்பார்கள்.

சுற்றுச்சூழல் என்னும்போது குப்பை போடுவதைக் காட்டிலும் நிறைய அம்சங்கள் அடங்கியுள்ளன. உலக வெப்பமயமாதல் என்பது அண்மையில் நிறைய மக்களின் கவனத்தை ஈர்த்து உள்ளது. நாம் எவ்வாறு நமது உலகத்தை இதிலிருந்து காப்பாற்றலாம்? மனிதர்கள் அதிகமாக மின்சாரம் பயன்படுத்துவதால் அதிகமாகக் கார்பன்டை ஆக்ஸைடு வெளியிடப்படுகிறது.

இதனால் நாம் நம்முடைய மின்சாரப் பயன்பாட்டினைக் குறைப்பதன் மூலம் உலகத்தைக் காக்கலாம். சிறிது வெப்பமாக இருந்தாலும் உடனே குளிர் சாதனப் பெட்டியைப் பயன்படுத்துகிறோம். உலகம் மேலும் வெப்பமாகிறது என்பதனை மறந்து விடுகிறோம். அதனால் நமக்கு உண்மையில் தேவைப்படும் போதே குளிர்சாதனத்தைப் பயன்படுத்த வேண்டும். அறையில் எல்லாம் அவை பயன்பாட்டில் இருந்தால் நமக்கு என்ன என்று இருக்காமல் அதனை நமது தலையாயக் கடமையாகக் கொண்டு அணைத்து விடுதல் அவசியம். பள்ளிகளில் அதனைப் பார்த்தாலும் நாம் நமது கடமையைத் தவறாது செய்ய வேண்டியது அவசியம்.

பொதுப் போக்குவரத்தில் பயணம் மூலமும் நாம் நமது சுற்றுச்சூழலைப் பாதுகாக்கலாம். கண்டிப்பாகச் சொந்தப் போக்குவரத்தில் பயணம் செய்வதே சொகுசான ஒன்று. ஆனால் வாகனத்தில் அவ்வாறு செய்தால் நாம் நமது எதிர்காலத்தினரை அழிவின்

பாதையில் ஓட்டிக்கொண்டிருக்கிறோம். எனவே, பிறரின் நலத்தை மனத்தில் கொண்டும் நமது நலத்தை மனத்தில் கொண்டும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க மிகவும் எளிமையான ஒரு வழி பொதுப்போக்குவரத்தில் பயணம் செய்வதே ஆகும்.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டுமென்ற விழிப்புணர்வு பலரிடம் இல்லை. அதனால், விழிப்புணர்வு அதிகரிக்கும் வழியில் சுவரொட்டிகள் செய்து அனைவரும் பார்க்கும் ஒரு பொது இடத்தில் காட்சிக்கு வைக்கலாம். இவ்வாறு சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் ஒரு குழவாக ஈடுபடலாம்.

'கூழானாலும் குளித்துக்குடி கந்தையானாலும் கசக்கிக் கட்டு' என நமது சான்றோர்; சுத்தம் பற்றிக் கூறியுள்ளனர். நாம் செய்யும் சிறு முயற்சிகள் மூலம் நமது சுற்றுச்சூழலைப் பாதுகாக்கலாம். அதன் மூலம் ஒரு சுத்தமான மற்றும் மனிதனை படைத்த சிங்கப்பூரை உருவாக்கலாம்.

**பிரித்திகா**

**உயர்தமிழ்**

**உயர்நிலை 3**

## குடும்ப வாழ்வின் அவசியம்

நல்ல குடும்பம் பல்கலைக்கழகம் என்று பலர் சொல்வது எனக்கு அன்றுதான் உணரும்படியான சூழல் வந்தது. அன்றுதான் என் குடும்பம் ஒன்றாகச் சந்தித்த நாள். அன்று தான் என் தேர்வின் மதிப்பெண்கள் வந்தன. வாழ்க்கையில் நான் எதிர்பாராத மதிப்பெண்களை எடுத்திருந்தேன். என் கையும் காலும் ஓடவில்லை. அன்று என் மனநிறைவுக்கு அளவே இல்லை. என் மதிப்பெண்களை அறிந்த என் குடும்பத்தினர் உச்சி குளிர்ந்தனர். இறுதித் தேர்வில் எல்லாப் பாடங்களையும் கரைத்துக் குடித்துத் தேர்வு எழுதியதால் நல்ல தேர்ச்சி பெற்றேன் என்று நினைத்து மட்டில்லா மகிழ்ச்சி அடைந்தேன்.

‘கண்ணுக்கு மையழகு கவிதைக்குப் பொய்யழகு’ என்பதைப் போன்று சமுதாயத்திற்குக் குடும்பம்தான் அழகு. நான் தேர்வில் நன்றாகச் செய்திருந்தால் அதற்கு முழுக் காரணம் என் குடும்பமே ஆகும். வாழ்க்கை என்ற முள்ளும், புள்ளும் நிறைந்த கரடுமுரடான பாதைய்யில் நடக்க குடும்பம் மிகவும் முக்கியம். நல்ல மதிப்பெண்கள் எடுத்ததால் அதைக் கொண்டாட என் பெற்றோர்கள் என்னையும் என் தங்கையையும் சாப்பிட வெளியே அழைத்துச் சென்றனர். என் பெற்றோர்களும் தங்கையும் மலர்ந்த முகத்துடன் உட்கார்ந்திருந்தபோது அவர்கள் என் வெற்றியில் என்ன பங்கு வகித்தார்கள் என்று சிந்தித்தேன். மீண்டும், மீண்டும் மனந்தளராமல் விடாமுயற்சியுடன் படித்ததால் வெற்றி உன் பக்கம் என்று என் அப்பா சொன்னதைக் கேட்ட ஞாபகம் வந்தது. மேலும் தோல்விதான் வெற்றிக்கு முதல்படி அல்லது அடிமேல் அடிவைத்தால் அம்மியும் நகரும் என்று சொல்லியே எனக்கு ஊக்கம் அளித்தவர் என் அப்பா. அன்புடனும் அறிவுரையுடனும் விளக்கம் அளித்தது மட்டுமல்லாமல் என் அம்மா எல்லாவற்றிற்கும் உடனடியாக உதவி செய்தது, என் தங்கை எனக்கு ஊக்கம் அளித்தது எல்லாவற்றையும் எண்ணியபடி இருந்தேன்.

“சாப்பாடு வந்துவிட்டது நீ எங்கே உன் நினைவுகளில் மூழ்கியிருக்கிறாய் என்று என் அம்மா சொன்னார். நான் உடனடியாகப் பகல்கனவு காணாமல் சாப்பிட ஆரம்பித்தேன். நாங்கள் மகிழ்ச்சியுடனும் மனநிறைவுடனும் சாப்பிட்டுக் கொண்டாடினோம். பின் சாப்பிட்டுவிட்டுப் பேரங்காடியில் சிறிது நேரம் அங்கும், இங்கும் நடந்துகொண்டே நேரத்தைக் கழித்திட அங்கு என் அப்பா அவருக்குத் தெரிந்தவரைச் சந்தித்தபோது என் மதிப்பெண்களைப் பற்றிப் பெருமையுடன் சொன்னார். என் பெற்றோர்களின் சந்தோஷமும் பெருமையும் என் கண்ணுக்குக் குளிர்ச்சி தந்தது. அன்றுதான் குடும்பம் என்பது இறைவன் தந்த வரம் என்பதை உணர்ந்தேன். அன்றுதான் என்னுடைய குடும்ப உறுப்பினர் அனைவரும் மிகவும் மகிழ்ச்சியுடன் இருந்த ஒரு நாள் ஆகும்.

**சமிஹா ஃபரான்ஸ்**

**விரைவு**

**உயர்நிலை 4**

## ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்கிற பழமொழிக்குச் சிங்கப்பூர் ஒரு சிறந்த உதாரணமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். நம் நாட்டில் வெவ்வேறு இனம், மொழி மற்றும் மதம் உடையவர்கள் இருந்தாலும் சிங்கப்பூரர்கள் அனைவரும் வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகின்றார்கள். நம் தேசிய உறுதிமொழியில்கூட இந்த ஒற்றுமை கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த எண்ணப்போக்கு அனைத்துச் சிங்கப்பூரர்களிடம் இருப்பதால் நம் நாடும் பலவித நன்மைகளை அடைகின்றன.

முதலில், சிங்கப்பூரர்கள் வெவ்வேறு இனம், மற்றும் மதங்களில் வேற்றுமைகளைப் புரிந்து கொண்டு ஒற்றுமையுடன் இருப்பதால், வெவ்வேறு இனச் சமுதாயங்களுக்கு இடையே ஏற்படும் சண்டை சச்சரவு மிகவும் குறைந்து விடுகிறது. சிங்கப்பூரர்கள் அனைவரும் ஒன்று கூடி வாழ்வதால் பல்வேறு இனம் மற்றும் மதச் சமுதாயங்களுக்கு இடையே இருக்கும் பிரச்சனைகள் ஒவ்வொருவரின் வேற்றுமைகளைப் புரிந்துகொண்டு நடப்பதால், அவை தீர்வடைகின்றன. எனவே, சிங்கப்பூரில் இருக்கும்போது நீ இந்தியனாக இருந்தாலும் சீனனாக இருந்தாலும் அல்லது எந்த இனத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், அனைவருக்கும் சம மரியாதை கிடைக்கும் என்பதே உண்மை. எனவே, வேற்றுமைகளை மறந்து நாம் வாழ்வதால் வெவ்வேறு சமுதாயங்களுக்கு இடையே ஏற்படும் பிரச்சினை குறைந்து அனைவரும் பயப்படாமல் சுலபமாக மற்ற இனத்தவருடன் இணைந்து சந்தோஷமாக வாழ முடிகிறது. வேறுபடும் பிரச்சினைகள் குறைவதால் ஏற்படும் கலவரங்களும், வாக்குவாதங்களும் குறைகிறது. இதனால் அமைதி நிறைந்த நாடாகவும், பாதுகாப்பான நாடாகவும் இருக்கிறது. வேற்றுமைகளை மறந்து வாழ்வதால் ஏற்படும் ஒரு நன்மை ஆகும்.

இரண்டாவதாக மற்ற இனம், மொழி மற்றும் மதம் உடையவர்களுடன் இணைந்து வாழ்வதால் நம்மால் மற்றவர்களின் மொழியைப் பற்றியும் அவர்களின் கலாச்சாரத்தைப் பற்றியும் இன்னும் ஆழ்ந்த அளவில் கற்றுக்கொள்ள முடியும். மற்ற மொழி பேசும் நண்பர்கள் நமக்குச் சிங்கப்பூரில் நிறைய நண்பர்கள் இருப்பார்கள் அவர்களுடன் உரையாடும் போதே அல்லது அவர் அவர்களுடைய மொழியில் இருந்து சில வார்த்தைகளைப் பயன்படுத்தும் பொழுதே அதைப்பற்றி நாம் கேட்டு அறிந்துகொள்ளலாம். இதனால் மற்ற மொழிகளின் அறிவும் வளரக்கூடும். அதுமட்டும் இல்லாமல் சிங்கப்பூரர்கள் அனைவரும் இணைந்து வாழ்வதால் சில நேரங்களில் நாம் மற்ற மதங்களின் பண்டிகைகளைக் கொண்டாடுவது உண்டு. உதாரணத்திற்கு நான் இந்து மதத்தைச் சார்ந்தவனாக இருந்தாலும் நான் என் முஸ்லீம் நண்பர்களுடன் சேர்ந்து பெருநாள் கொண்டாடினேன். இந்த அனுபவத்தின் மூலம் ஒவ்வொரு வருடமும் நான் அவர்கள் எடுக்கும் நோன்பைப் பற்றியும் அவர்கள் தினசரி உண்ணும் விதவிதமான உணவு வகைகளைப்பற்றியும் அவர்கள் ரமலான் கொண்டாடுவதைப் பற்றியும் நன்கு அறிந்து கொண்டேன். இதுபோல் அனுபவம் மற்ற நாடுகளில் கிடைப்பது மிகவும் அரிதானது என்று நான் நம்புகிறேன். எனவே நாம் மற்ற மற்ற சமுதாயங்களுடன் இணைந்து வாழ்வதால் அவர்களுடைய கலாசாரத்தைப் பற்றியும் வழிமுறைகளைப்பற்றியும் நம்மால் சுலபமாக அறிந்துகொள்ள முடியும். நம்முடைய பொது அறிவும் வளரும். இவையும் நாம் இணைந்து வாழ்வதால் நமக்கு ஏற்படும் நன்மைகள் ஆகும்.

இறுதியில் சிங்கப்பூரர்கள் அனைவரும் இனம், மொழி, மதம் ஆகிய வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டு வாழ்வதால், நாம் அனைவரும் கலவரங்கள் நடக்கும் என்று பயப்படாமல் மகிழ்ச்சியுடன் வாழலாம் மேலும் மற்ற மொழி, மற்றும் மதங்களைப் பற்றியும் ஆழ்ந்த

அளவில் கற்றுக்கொள்ளலாம் இந்த நன்மைகளை நாம் மட்டும் அனுபவிக்காமல் நம்முடைய அடுத்த தலைமுறையினரும் அனுபவிக்க வேண்டும். எனவே பெரியவர்கள் இளையவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருந்து அவர்களுக்கு வேற்றுமைகளை மறந்து, மற்றவர்களும் இணைந்து வாழக் கற்றுக்கொடுக்க வேண்டும். இதனால், சிங்கப்பூரின் எதிர்காலமும் பிரகாசமாக இருக்கும் என்று உறுதியளிக்கிறேன்.


**கிர்த்திக்**

**விரைவு**

**உயர்நிலை 4**

## சமூக வலைத்தளங்களால் உண்டாகும் நன்மை தீமைகள்

இந்நவீன உலகில் எல்லோரும் ஒரு பரபரப்பான வாழ்க்கை முறையில் வாழ்கின்றனர். மாணவர்கள் வாழ்க்கை என்ற பந்தயத்தில் பின் தங்கிவிடாமல் இருப்பதற்குப் படிப்பின் மேல் அதிகக் கவனமும் உழைப்பும் செலுத்துகின்றனர். இதனால் மாணவர்கள் படிக்காத நேரத்தின்போது, மற்ற நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டார்கள். பெரும்பாலோர் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி நேரத்தைக் கழிக்கின்றனர். தொழில்நுட்பம் நாளுக்கு நாள் வளர்வதால் சமூக வலைத்தளங்களின் வகைகளும் ஏறிக்கொண்டே இருக்கின்றன. மாணவர்கள் சமூக வலைத்தளங்களின் மூலம் புதிய நண்பர்களைப் பெறுகின்றனர். இந்தச் செயல் மூலம் மாணவர்களின் வாழ்க்கைக்கு நன்மைகள் ஏற்படுகின்றனவா? சமூக வலைத்தளங்களின் மூலம் புதிய நண்பர்களைப் பெறுவதில் பல தீமைகள் ஏற்படுகின்றன என்று நான் உறுதியாக நம்புகிறேன். அதற்கான காரணங்களை நான் இந்தக் கட்டுரையில் எழுதப்போகிறேன்.

சமூக வலைத்தளங்களின் மூலம் பெற்ற புதிய நண்பர்களின் உண்மையான அடையாளம் நமக்குத் தெரியாது. இதனால் மாணவர்களின் வாழ்வில் நிறைய பிரச்சினைகள் உருவாகும். நிறைய மக்கள் தங்களின் சமூக வலைத்தளங்களின் பக்கத்தில் போலியான தகவல்களை எழுதியுள்ளனர். இதனால் மாணவர்களுக்கு இவர்களின் உண்மையான அடையாளமும் எண்ணங்களும் தெரியாமல் போகிறது. புதிய நட்புகளை ஆராயாமல் உருவாக்கினால் மாணவர்களுக்கு நிறைய தீமைகள் ஏற்படும். சமீபத்தில் என் தோழி மாலா, டிவிட்டரில் ஒரு புதிய ஆளுடன் நட்பை வளர்த்தார். மாலா கண்மூடித்தனமாக இருந்ததால் தன்னுடைய எல்லா விவரங்களையும் அவரிடம் கூறினாள். மாலா இந்த ஆடவரின் உண்மையான நோக்கத்தைப் புரிந்துகொள்ளவில்லை. இந்த ஆடவருக்கு இப்பொழுது மாலாவின் வீடு எங்கு இருக்கிறது என்று தெரிந்ததால் அவர் மாலாவின் வீட்டில் கொள்ளையடித்தார். முதலில் மாலாவுக்கு யார் இந்தக் கொடூரமான செயலைச் செய்தார் என்று தெரியவில்லை. திருடன் மாலாவின் நண்பன் தான் என்று காவலர்களின் மூலம் தெரிய வந்தது. இதுபோல நிறைய சம்பவங்கள் இணையதளங்களின் மூலம் உருவாகும் நட்புகள் மாணவர்களின் முதுகில் தங்கியிருக்கிறது. இதனால் சமூக வலைத்தளங்களின் மூலம் புதிய நண்பர்களைப் பெறுவது ஒரு நல்ல யோசனை அல்ல.

சமூக வலைத்தளங்களின் மூலம் புதிய நண்பர்களைப் பெறுவதால் நிறைய மாணவர்கள் தங்களைச் சுற்றி இருக்கும் குடும்பத்தார் மற்றும் நண்பர்கள் மீதான கவனிப்புக் குறைய ஆரம்பிக்கும். வலைத்தளங்களில் கண்டுபிடித்த புதிய நண்பர்களோடு பேசுவதற்கு மாணவர்கள் தங்களின் கைத்தொலைபேசியை வெகு நேரத்திற்குப் பயன்படுத்துவார்கள். இதனால் அவர்களைச் சுற்றியிருக்கும் நெருங்கிய நண்பர்களோடும் மேலும் குடும்பத்தாரோடும் நேரத்தைச் சேர்ந்து கழிப்பது குறைந்துகொண்டே போகும். இது மாணவர்களின் உண்மையான உறவுகளின் மேல் பாதிப்பை ஏற்படுத்தும். ஏனென்றால் மற்ற மாணவர்கள் அவர்களின் மீது தம் நண்பர்களுக்கு அக்கறை இல்லை என்று நினைத்துக்கொண்டு விலகத் தொடங்குவார்கள். கைபேசியை வேலை செய்யாதபோது மாணவருக்குக் கை கொடுக்க யாருமே இருக்கமாட்டார்கள்.

ஆனால், மாணவர்கள் சிலர் வலைத்தளங்களின் மூலம் புதிய நண்பர்களைப் பெறுவதில் பல நன்மைகள் ஏற்படுகின்றன எனக் கருதுகின்றனர். இவர்களின் வாதத்திற்கு ஆதரவு மாணவர்கள் புதிய நண்பர்களிடமிருந்து புதிய கருத்துக்கள் கற்றுக்கொள்வார்கள். மாணவர்கள் சமூக வலைத்தளங்களின் மூலம் வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்களுடன்

நட்பு உருவாக்க முடியும். இதனால் மாணவர்கள் இவர்களின் மூலம் புதிய கலாசாரத்தைப் பற்றியும் ஒரு புதிய மொழியையும் கற்றுக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. மாணவர்கள் புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்ளும் போது வாழ்க்கையில் தேர்ச்சி பெற முடியும். இதனால் சமூக வலைத்தளங்களின் மூலம் புதிய நண்பர்களைப் பெறுவதில் நன்மைகள் ஏற்படுகின்றன.

எனவே மாணவர்கள் சமூக வலைத்தளங்களின் மூலம் புதிய நண்பர்களைப் பெறுவதில் நன்மைகளைவிட தீமைகள்தான் அதிகம். மாணவர்கள் வலைத்தளங்களைக் கவனத்துடன் பயன்படுத்த வேண்டும். ‘அன்பான நண்பனை ஆபத்தில் அறியலாம்’ என்று நம் முன்னோர்கள் முன்பே கூறியுள்ளனர்.


**மிருதுளா ரவி அனுராதா**

**விரைவு**

**உயர்நிலை 4**

## வேற்றுமையில் ஒற்றுமை

அவன் நெஞ்சிலே ஆயிரம் ஆசைகள், அழுவதும் சிரிப்பதும் ஆசையின் விளைவுகள் என்று வாலி எழுதியுள்ளார். முன்னால் பிரதமர் லீயின் ஆசை என்ன என்று தெரியுமா? அதுவே நம் நாட்டில் பல இன மக்கள் ஒற்றுமையாக வாழ்வதே ஆகும். அவர் உருவாக்கிய நாடு இன்றும் ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகிறது. நம் சிங்கப்பூரர்கள் பல இன மக்களாக இருந்தாலும் பெரிய குடும்பம் போல் வாழ்கிறோம். இந்த ஒற்றுமை பல நாட்கள் கிடைக்காமல் போய்விட்டது. சிறிய நாடாக இருந்தாலும் நம் எல்லோருடைய மனமும் பெரிதுதான்.

நாம் இவ்வளவு ஆண்டுகளாக வேற்றுமை மறந்து ஒற்றுமையுடன் வாழ்ந்து வருவதால் நம் நாட்டில் போர் புரிதல் நடப்பதில்லை. பல இனமக்கள் வாழும் நாட்டில் வெவ்வேறு இடத்திற்கு ஒரு ஆடை, பாரம்பரியம் அல்லது கலாச்சாரம் இருக்கும். அதனால் இரு இனங்களுக்குள் வேறுபாடு இருக்கத்தான் செய்யும். ஆனால் இந்த மாற்றத்தைப் போக்க சிங்கப்பூர் அரசாங்கம் தினமும் முயற்சி செய்து கொண்டிருக்கிறது. இந்த மாற்றத்தைப் போக்கியதால் நாம் அமைதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். கொலை, தீவிரவாதம் போன்ற செயல்கள் பல இனச் சமுதாயத்தில் நடப்பதில்லை. இந்த அமைதியான நாடு, நாம் மற்றவர்களுடன் வைத்திருக்கும் நல்ல உறவு எல்லாவற்றையும் ஏற்படுத்திய நம் அரசாங்கத்திற்கு நன்றி சொல்ல வேண்டும். போர் புரிதல் நடந்து கொண்டிருந்தால் நம் நாடு கண்டிப்பாக இரண்டாகப் பிரிந்து ஒன்று சேர்க்க முடியாமல் போய்விடும். நமக்குக் கிடைக்கும் நல்ல வசதிகள் எல்லாம் காணாமல் போய்விடும். அதேநேரம் ஐம்பத்தி இரண்டு வருடங்களுக்குள் பல இன நண்பர்களை நன்றாகப் புரிந்து கொண்டதால் இன்று சாலைகள் அமைதியாக உள்ளன.

நம் நாடு தொழில்நுட்பத்தில் எவ்வளவோ வளர்ந்தாலும் நாம் நம் நண்பர்களுடன் பகிர்ந்து கொண்ட அனுபவங்களே நமக்கு மாற்ற முடியாத ஒன்றாக இருக்கிறது. பல இன மக்களுடன் வாழ்வதால் நாம் மற்ற இனத்தின் பழக்கம், கலாச்சாரம் போன்றவற்றைக் கற்றுக்கொள்ளும் சம்பவங்கள் கண்டிப்பாக நேரிடும். நண்பர்கள் தங்களுடைய கலாசாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் பொழுது, நமக்கே தெரியாதவற்றை நாம் கற்றுக்கொள்ளலாம். இந்த ஒற்றுமை அல்லது ஒரு நாடு என்ற எண்ணப்போக்குடன் இருப்பதால், நாம் நிச்சயமாக மற்ற இனத்தைப்பற்றி நன்றாகப் புரிந்துகொள்ளலாம்.

வேற்று இன நண்பர்களுடன் ஒற்றுடையுடன் வாழ்வதால், நாம் தயங்காமல் மற்றவர்களுக்கு உதவி செய்கிறோம். பல இன மக்களாக வாழ்ந்தாலும் நம் உதவி யாருக்குத் தேவைப்பட்டாலும் உடனடியாக நாம் உதவி செய்யச் செல்வோம். இது எனக்குப் பிடித்த குணம். இதற்குக் காரணம் உதவி சிறிதோ பெரிதோ நமக்கு உதவி செய்ய யாரோ கண்டிப்பாக இருப்பார் என்ற தன்னம்பிக்கை எனக்கு இருக்கும். மற்றவர்களுக்கு உதவி செய்வதால் நமக்கு நன்மை ஒன்றும் கிடைக்காது. ஆனால், உதவி செய்தவருக்கு ஒரு பெரிய நன்மையாக இருக்கலாம். நானே நிறைய சமயங்களில் பல இன ஆடவர்கள் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்வதைப் பார்த்திருக்கிறேன். இதைப் பார்த்தவுடன் எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது.

‘ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு’ என்ற பழிமொழி விளக்குவதுபோல் நம் ஒன்று சேர்ந்தால்தான், நம் நாடு நிம்மதியாக இருக்கும் என்று நான் நம்புகிறேன் நாம் மற்ற இனத்தினரைப் புரிந்துகொள்ளவிட்டால் அது கண்டிப்பாக குழப்பத்தை ஏற்படுத்தும். இந்தக்

குழப்பம் ஒரு சண்டையாக மாறி, போரே உண்டாகக் கூடிய சூழ்நிலை ஏற்படலாம். அதனால், இந்தச் சூழ்நிலை ஏற்படாமல் பார்த்துக்கொள்ள நான் மற்ற இனத்தவருடன் ஒற்றுமையாக வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் பல ஆண்டுகளாகச் செய்து வருவதை மீண்டும் தொடர்ந்து செய்தால் கண்டிப்பாக நம் நாடு வெற்றியடையும்.


**ஓவியா நமோ**

**விரைவு**

**உயர்நிலை 4**